

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அறிஞர் அண்ணா விளையாட்டரங்க மைதானத்தில் நடைபெற்ற 68-வது குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2017) தேசிய கொடியினை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார்கள்.
மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கு.தர்மராஜன் இ.கா.ப., உடனுள்ளார்.

செ.வெ.எண்: 70/2017 நாள்: 26.01.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் 68-வது குடியரசு தின விழா கொண்டாட்டம்
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள்
இன்று (26.01.2017) தேசியக்கொடியினை ஏற்றி வைத்து,
103 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 14 ஆயிரத்து 700/- மதிப்பிலான
நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டரங்க மைதானத்தில் 68-வது குடியரசு தின விழா இன்று (26.01.2017) மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறை, தேசிய மாணவர் படை, ஊர்காவல் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து காவல்துறையை சார்ந்த 45 பேருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பதக்கங்களையும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் 2 பேருக்கு ரூ.75,000/-க்கான காசோலைகளும், வேளாண்மைத்துறையின் மூலம் 3 பயனாளிகளுக்கு ரூ.35,000/- மதிப்பிலான இடுபொருள்களும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.3,600/- மதிப்பிலான இடுபொருள்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.18,600/- மதிப்பிலான செயற்கை கால்களும், சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ், 15 பயனாளிகளுக்கு ரூ.3,07,000/- மதிப்பிலான உதவித்தொகைகளும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 5 பயனாளிகளுக்கு ரூ. 21,500/- மதிப்பிலான இலவச தேய்ப்புப்பெட்டிகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் 21 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 27,000/-மதிப்பிலான ஊக்கத்தொகைகளையும், 20 வருடங்களாக விபத்தில்லாமல் வாகனம் ஓட்டிய திரு. விஜயக்குமார் என்பவருக்கு தங்கப்பதக்கம் மற்றும் ரூ.15,000/-க்கான காசோலையினையும், இண்ட்கோசர்வ், குன்னூர் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், "ஊட்டி டீ" சிறப்பாக விற்பனை செய்த 6 நபர்களுக்கு ரூ. 12,000/-க்கான காசோலைகளும் என மொத்தம் 103 பயனாளிகளுக்கு ரூ. 5 இலட்சத்து 14 ஆயிரத்து 700/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், சிறப்பாக பணிபுரிந்த அரசு அலுவலர்கள் மற்றும் கொடிநாள் வசூலில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 165 அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து தேசப்பற்றை விளக்குகின்ற வகையில் தேசிய ஒருமைப்பாட்டை எடுத்துரைக்கும் விதத்திலும் பள்ளி மாணவ, மாணவியர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தமது குடும்பத்தினருடன் (மனைவி திருமதி மாயா சவான்) கண்டுகளித்தார்.

இதில் நடனம் நிகழ்த்திய தக்கலை அமலா மெட்ரிக் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கு முதல் பரிசும், நாகர்கோவில் இந்து வித்யாலாயா மேல்நிலைப்பள்ளிக்கு இரண்டாம் பரிசும், தோவாளை ராமலெட்சுமி வித்யாலாய மெட்ரிக் பள்ளிக்கு மூன்றாம் பரிசும் மற்றும் வடசேரி அரசு மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில் டதி மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிற்கு ஆறுதல் பரிசுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளை மிகச்சிறப்பாக தொகுத்து வழங்கிய திரு. சங்கரநாராயணன், திருமதி. முத்துலெட்சுமி ஆகியோர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விழாவில் கௌரவித்தார்கள். விழாவில் அரசு ரப்பர் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ராகேஷ்குமார் டோக்ரா இ.வ.ப., திருமதி. அனு டோக்ரா, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கு. தர்மராஜன், இ.கா.ப., மாவட்ட வனத்துறை அலுவலர் திரு. விஷ்மிஜூவிஷ்வநாதன் இ.வ.ப., திருமதி. பிரீத்தி விஸ்வநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி டி.கெட்சி லீமா அமலினி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. கே.விஜயராணி, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. இளங்கோ, கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.மதுசூதனன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.பொ.ராஜேந்திரன் (பொது), திரு.நிஜாமுதீன் (வேளாண்மை), உதவி ஆணையர் (ஆயம்) திரு. காளிமுத்து, ஒசூர் மேலாளர் திரு. சஜீத், வட்டாட்சியர் திரு. அருளரசு மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.